DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-39/2023

Prosecution witness - PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிமுத்து | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.03.2026 - 01.20 PM

முதல் விசாரணை:-

1. நான் கடலாடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 3, 4 ஐத் எனக்கு தெரியும்.

2. கடந்த 24.02.2023ம் தேதி இரவு 08.30 மணியளவில் மலட்டாறு ஒயின்ஷாப் அருகே எதிரி செந்துாரான் என்னை போலீசாரிடம் நீ தான் மாட்டிவிட்டது என்று கூறி என்னை பைக்கிலிருந்து கீழே தள்ளிவிட்டார். நான் உடனடியாக எனது அண்ணனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். எனது அண்ணன் மறுநாள் பேசிக்கொள்ளலாம் வா என்று கூறியதன் பேரில் நான் வந்து விட்டேன். 25.02.2023ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் எதிரியின் மகன் சுரேஷ் என்பவருக்கு போன் செய்து பேசினேன். சுரேஷ் என்னிடம் வாருங்கள் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் எனது அண்ணன் வில்வதுரை, எனது அண்ணன் மகன் தமிழ்நாதன், ஆகியோர் இருசக்கர வாகனத்தில் நல்ல மருது என்பவரது வீட்டின் அருகே சென்றோம்.

3. அப்போது எனது அண்ணன் எதியிடம் ஏன் தகராறு செய்கிறாய் என்று கேட்டதற்கு தேவிடியா மகனே கூறி என்னடா செய்வாய் என்று கீழே கிடந்த கல்லை எடுத்து அண்ணனின் தலையில் எறிந்து விட்டார். எனது அண்ணன் உடனடியாக கீழே விழுந்து விட்டார். அருகில்நின்று கொண்டிருந்த

முருகன் என்பவர் எனது அண்ணனை தூக்கினார். நானும், எனது அண்ணன் மகனும் இருசக்கர வாகனத்தில் எனது அண்ணனை தூக்கி கொண்டு கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம், கடலாடி அரசு மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

மலட்டாறு ஒயின்ஷாப்பில் எதிரி என்னை தள்ளிவிட்டது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 24.02.2023 ம் தேதி நடந்த சம்பவத்தை தான் எனது அண்ணனிடம் போன் முலம் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். எதிரியின் வீடு சம்பவ இடத்திற்கு அருகே உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் மூன்று பேரும் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோமா அல்லது ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோமா என்றால் தனித்தனியாக வாகனத்தில் சென்றோம். முருகன் என்பவர் எனது அண்ணனின் சம்மந்தி என்றால் சரிதான். முருகனின் வீடும் சம்பவ இடத்திற்கு அருகே உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக எனது அண்ணன் மற்றும் அண்ணன் மகன் உள்ளார் என்றால் சரிதான்.

எனது அண்ணனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தான் கடலாடி மருத்துவனையில் நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது அண்ணன் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாா சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றார் கடலாடி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்தது காவலரா அல்லது சார்பு ஆய்வாளரா என்றால் காவலரும்,

சார்பு ஆய்வாளரும் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் ஏதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:45:20 +0530